DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 345/2025**

**eposition of LW3 examined as PW3** Dt. 10.03.2026

| | |
|---|---|
| Name | ஜெயா |
| Husband's Name | அறிவழகன் |
| Village | நல்லாவூர் |
| Taluk | |
| Age | 40/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 10.03.2026

(A1, A2 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது. சம்பவ சமயத்தில் நான் வீட்டில் தூங்கிவிட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசுதரப்பு குறுக்குவிசாரணை**

ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள் ஆவார். கடந்த 08.09.2025 ம் தேதி இரவு 10.00 மணியளவில் நாங்கள் வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரிகள் எங்கள் வீட்டிற்கு வந்து அ.சா.1 எனது கணவரை தகாத வார்த்தைகளில் திட்டியும், எதிரி ராஜா கையில் மறைத்து வைத்திருந்த அறிவாளால் எனது கணவரின் தலை மற்றும் கையில் வெட்டி ரத்த காயத்தை ஏற்படுத்தியதாகவும், தடுக்க வந்த எனது மகன் அ.சா.2யை அறிவாளால் வெட்டி ரத்தக்காயத்தை ஏற்படுத்தியதாகவும், கொன்றுவிடுவதாக கொலை மிரட்டல் விடுத்ததாகவும் போலீசார் விசாரணையில் நேரடியாக பார்த்ததாக சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுடன் அ.சா.1, அ.சா.2 சமாதானமாகிவிட்டபடியால் அவர்களை வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக போலீசார் விசாரணைக்கு மாறுபட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

A. ஜெயா